(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 6(2).]

# பாராளுமன்றம்

## 6 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 யூன் 22, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2012 யூலை 04, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3இ ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2012 பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதிய 1747/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2012 ஏப்பிரல் மாதம் 04 ஆம் திகதிய 1752/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2012 மே மாதம் 09 ஆம் திகதிய 1757/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2012 மே மாதம் 09 ஆம் திகதிய 1757/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பிரிவின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் அதன் அங்கத்தவர்களினதும் எரிபொருள் கொடுப்பனவுகள் 2012.05.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது —

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கு மாதாந்தம் பெற்றோல் அல்லது டீசல் 225 லீற்றரையும் அதன் அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் பெற்றோல் அல்லது டீசல் 170 லீற்றரையும் வழங்க அல்லது அதற்குச் சமமான சந்தை விலைகளுக்கேற்ப கொடுப்பனவொன்றைச் செலுத்த வேண்டுமென்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய எரிபொருள் கொடுப்பனவுகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவுகளுக்குப் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் பதிலீடு செய்யப்படல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2012 யூலை 06 வெள்ளிக்கிழமை)

2073/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டுக்காக லக் சதொச நிறுவனத்துக்கு பருப்பு வழங்கிய வழங்குநர் அல்லது வழங்குநர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் வர்த்தகப் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி வழங்குநர்களை தெரிவு செய்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், குறித்த கேள்விப் பத்திரத்துக்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்த ஏனைய விண்ணப்பதாரிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்துக்கமைய வழங்குநர்களினால் பருப்பு வழங்கப்பட வேண்டிய கால எல்லை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2074/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் லக் சதொச நிறுவனத்திற்கு சீனி வழங்கிய வழங்குனர் அல்லது வழங்குனர்களின் பெயர்கள், முகவரிகள், வர்த்தகப் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வழங்குனர்களை தெரிவு செய்கின்றபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி கேள்விப் பத்திரத்திற்காக விலை மனுக்களை சமர்ப்பித்த ஏனைய விண்ணப்பதாரிகளின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்திற்கு அமைவாக வழங்குனர்களால் சீனி வழங்கப்பட வேண்டிய கால வரையறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2075/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் லக் சதொச நிறுவனத்திற்கு முட்டை வழங்கிய வழங்குனர் அல்லது வழங்குனர்களின் பெயர்கள், முகவரிகள், வர்த்தகப் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வழங்குனர்களை தெரிவு செய்கின்றபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி கேள்விப் பத்திரத்திற்காக விலை மனுக்களை சமர்ப்பித்த ஏனைய விண்ணப்பதாரிகளின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்திற்கு அமைவாக வழங்குனர்களால் முட்டை வழங்கப்பட வேண்டிய கால வரையறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2076/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,—கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) இலங்கையில் லக் சதொச நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் லக் சதொச நிறுவனத்திற்கு கோழி இறைச்சி வழங்கிய வழங்குனர் அல்லது வழங்குனர்களின் பெயர்கள், முகவரிகள், வர்த்தகப் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வழங்குனர்களை தெரிவு செய்கின்றபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி கேள்விப் பத்திரத்திற்காக விலை மனுக்களை சமர்ப்பித்த ஏனைய விண்ணப்பதாரிகளின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்திற்கு அமைவாக வழங்குனர்களால் கோழி இறைச்சி வழங்கப்பட வேண்டிய கால எல்லை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2302/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கல்வி அமைச்சின் கீழ் வழங்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பதவிப் பெயர் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் சம்பளத் திருத்தத்திற்கு ஏற்ப ஆசிரியர் சேவையின் ஒவ்வொரு தரத்திற்கும் உரித்தாகும் அடிப்படை மாதாந்தச் சம்பளம் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) அரசாங்க ஆசிரியர்களுக்கு கிடைக்கும் மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக உரித்தாகும் சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆசிரியர் சேவையின் ஒவ்வொரு தரத்திற்கு ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2303/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் டெங்கு நோய் தொற்று, வாகன விபத்துகள், தற்கொலை, உணவு நஞ்சாகுதல், உடல் அல்லது உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகுதல் ஆகிய காரணங்களால் வருடாந்தம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட அல்லது மரணமடைந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையும், அவர்கள் கல்வி பயின்ற பாடசாலைகளும் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) கடந்த வருடத்தில் பல்வேறு தவறுகளுக்காக குற்றஞ்சுமத்தப்பட்டு சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை, பிள்ளையின் வயதெல்லை மற்றும் பாடசாலைக்கு ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2012 யூலை 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0657/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) நாட்டின் 30 மிகப் பெரிய அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் எவை என்பதையும்;

(ii) அவை அரசுக்குச் சொந்தமான 30 மிகப் பெரிய தொழில்முயற்சிகளாக எவ்வாறு கருதப்படுகின்றன என்பதையும்;

(iii) ஒவ்வொன்றிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம், மற்றும் தற்போதுள்ள பணியாட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு நிறுவனத்தினதும் இற்றைவரையிலான கடந்த 5 வருடங்களுக்கான இலாப, நட்டத்தை வருடாந்த அடிப்படையிலும்;

(v) அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு தொழில்முயற்சியினதும் சந்தைப் பங்கு எவ்வளவு என்தையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்சொன்ன தொழில்முயற்சிகளில், நட்டத்தில் இயங்கும் ஒவ்வொன்றையும் இலாபமீட்டும் தொழில் முயற்சிகளாக்க முடியுமா எனக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1339/ '11

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் தமன பிரதேச செயலாளர் பிரிவில் இளைஞர் யுவதிகளுக்கென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடாத்தப்பட்ட பிரதேச இளைஞர் வள மைய நிலையம் பயன்படுத்தப்படாது பல ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதன் காரணமாக தலைவர்கள் உருவாவதற்கும் அத்துடன் தொழில்சார் மற்றும் விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கும் இளைஞர் யுவதிகளுக்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த வள மைய நிலையத்தைக் கைவிடுவதற்குக் காரணமாயமைந்த தடைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தடைகளை உடனடியாக அகற்றி இந்த வள மைய நிலையத்தை பிரதேசத்திலுள்ள இளைஞர் யுவதிகளின் பயன்பாட்டின் பொருட்டு மக்கள் உரிமைக்கு மீண்டும் கையளிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1664/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2011 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் லக் சதொச நிறுவனத்தினால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோழி இறைச்சியின் நிறை எவ்வளவு;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ இறைச்சிக்கு இந்தியாவுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) இக்கோழி இறைச்சி களஞ்சியப்படுத்தப்பட்ட இடங்கள் யாவை;

(iv) களஞ்சியப்படுத்திய இடங்களிலிருந்து நுகர்வுக்காக கோழி இறைச்சி விநியோகிக்கப்பட்ட திகதி, தொகை மற்றும் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் ஒவ்வொரு களஞ்சியத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாவை;

(v) 2011 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் குறிப்பிட்ட கோழி இறைச்சித் தொகையில் களஞ்சியங்களில் எஞ்சியிருந்த தொகை எவ்வளவு;

(vi) மேற்படி எஞ்சியிருந்த தொகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2057/ '11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியினால் கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளின் சகல கொள்வனவுகள் மற்றும் விற்பனையினையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் பொறுப்பான தரகர்களின் பெயர்களையும்;

(iii) தரகுக் கட்டணங்களை வெவ்வேறாகக் குறிப்பிட்டு ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கான செலவினையும்;

(iv) மேற்குறிப்பிட்ட 2 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு பங்குத் தரகர் கம்பனிக்கும் செலுத்தப்பட்ட தரகுக் கட்டணத்தினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் தரப்பட்ட ஒவ்வொரு பங்குகளின் கொள்வனவு அல்லது விற்பனைக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய மற்றும் கொள்வனவு அல்லது விற்பனையிலிருந்து இரண்டு வாரங்களில் சந்தை நிறைவு பெறும் போதிருந்த விலையை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2105/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் பாடசாலை கல்வி முறையில் பிள்ளைகள் பலதரப்பட்ட தரங்களில் பாடசாலைகளை விட்டுச் செல்கின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் விகிதாரசாரம் எவ்வளவு என்பதையும்;

(ii) பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு என்பதையும்;

(iii) தரம் 5 இல் பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்;

(iv) கல்வி பொதுத் தராதரப் பரீட்சையின் பின்னர் பாடசாலைகளை விட்டுச் செல்பவர்களின் விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) சிங்கள மொழி மூல, தமிழ் மொழி மூல மாணவர்களுக்கிடையில் பாடசாலை விட்டுச் செல்பவர்களின் விகிதாசாரம் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இலங்கையில் பிள்ளைகள் பாடசாலைகளை விட்டுச் செல்வதற்கான காரணங்கள் என்ன என்பதையும்;

(ii) இலங்கையில் பிள்ளைகள் பாடசாலை வருவதை ஊக்குவிப்பதற்காக தற்போது நடைமுறையில் இருக்கும் வேலைத்திட்டங்கள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், என்?

2110/ '11

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள வர்த்தக வங்கிகளில் ஊழியர் சேமலாப நிதியம் வைப்பிலிட்டுள்ள பங்குகளின் பெறுமதியை வங்கி வாரியாகவும்;

(ii) பங்குகளின் ஒவ்வொரு தொகுதியையும் கொள்வனவு செய்த திகதிகளை கம்பனி வாரியாகவும்;

(iii) அத்தகைய பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதை கம்பனி வாரியாகவும்;

(iv) பங்கின் ஒவ்வொரு தொகுதியையும் கொள்வனவு செய்த பெறுமதியையும்;

(v) இத்தகைய ஏதாவது பங்குகள் பின்னர் விற்கப்பட்டிருப்பின், அவைகள் விற்கப்பட்ட விலையையும் அவை யாருக்கு விற்கப்பட்டன என்பதையும்;

(vi) பங்குகள் வைப்புச் செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வங்கியினதும் பணிப்பாளர்கள் சபைகளுக்கு அரசாங்கத்தின் மற்றும் / அல்லது ஊழியர் சேமலாப நிதியத்தின் பெயர் நியமனம் செய்யப்பட்டவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் கல்வித்தகைமைகளையும்

அவர் இச்சபைக்குத் தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2294/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) 2000, 2001, 2002, 2003 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மாவட்ட அடிப்படையில் மூடப்பட்ட மத்திய அரசின் மற்றும் மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அறிவிப்பாரா?

(ஆ) ஏதேனும் பாடசாலையொன்று மூடப்படும் போது,

(i) அந்த பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் மாற்று நடவடிக்கை என்ன என்பதையும்;

(ii) கவனத்திற் கொள்ளப்படும் அளவு கோள்கள் எவை என்பதையும்;

(iii) கவனத்திற் கொள்ளப்படும் அளவுகோள்கள் இதுவரை மூடப்பட்ட பாடசாலைகள் தொடர்பாக பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011ஆம் ஆண்டுவரை மூடப்பட்ட பாடசாலைகளின் கட்டிடங்கள் இதுவரை ஏதேனும் பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் பயன்படுத்தப்பட்ட அத்தகைய நடவடிக்கைகளின் இயல்புகள் மற்றும் அதன் மூலம் சம்பாதிக்கப்பட்ட வருடாந்த வருமானம் யாது என்பதையும்;

(iii) பயனுள்ள நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாத பாடசாலைக் கட்டங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைள் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2610/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் முத்தெட்டுகல எனுமிடத்தில் காதி நீதி மன்றம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) குருநாகல் பசார் முஸ்லிம் பள்ளிவால் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் குறித்த பள்ளிவாசலுக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியை இதற்காக வழங்கியுள்ளனரா என்பதையும்;

(iii) மேற்படி நீதி மன்றக் கட்டத்தை நிர்மாணிப்பதற்காக குவைட் அரசின் நிதி உதவி பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இந்த காதி நீதி மன்றத்தை நிர்மாணிக்க எவ்வளவு காலம் எடுக்குமென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2612/ '12

கௌரவ ஆர்.எம். ரஞ்ஜித் மத்தும பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா கல்வியியற் கல்லூரியில் கடந்த காலத்தில் உடற் கல்வி கற்கை நெறிக்காக வருடாந்தம் 120 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(ii) நிதி குறைப்பு காரணமாக மேற்படி கல்வியியற் கல்லூரிக்கு 2012ஆம் ஆண்டில் 60 மாணவர்கள் மாத்திரமே இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நாடெங்கிலுமுள்ள ஒட்டுமொத்த பாடசாலைக் கட்டமைப்பில் உடற் கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகிறன்றன என்பதையும்;

(ii) 2012ஆம் ஆண்டில் ஊவா கல்வியியற் கல்லூரிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உடற் கல்வி கற்கைக்கான மாணவர்களின் எண்ணிக்கை அரைவாசியாக குறைக்கப்பட்டதன் காரணமாக மேற்கூறிய வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் இலக்கினை அடைய முடியாது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) உடற் கல்வி கற்கை நெறியைப் பயில்வதற்கான தகைமைகளைக் கொண்டுள்ள ஊவா மாகாணம் உட்பட நாடெங்கிலுமுள்ள மாணவர்களுக்கு மேற்படி நிலைமை காரணமாக இந்த ஆண்டில் ஏற்பட்ட அநீதியை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2633/ '12

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி அரசியல் கட்சிகளில் வெளிநாடுகளிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளும் கட்சிகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) வெளிநாட்டு நிதியைப் பெற்றுக்கொள்ளும் மேற்படி அரசியல் கட்சிகள் தொடர்பில் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனின், இதனை மேற்கொள்கின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(v) வெளிநாட்டு நிதியை பெற்றுக்கொள்ளும் அரசியல் கட்சிகளின் நிதி பெறும் முறைகள் பற்றி கண்காணிக்கப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1133/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மின்சார சபையிடமிருந்து மின்சாரத்தினைப் பெறும் நுகர்வோர்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(ii) வீட்டுப் பாவனை, அரசாங்க நிறுவனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள், மத நிறுவனங்கள் மற்றும் ஏனையோர் எனும் வகைகளின் கீழுள்ள இ.மி. சபையின் நுகர்வோர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) மொத்த உற்பத்தியின் நூற்றுவீதமாக ஒவ்வொரு நுகர்வொரினதும் மின்சார நுகர்வினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இற்றை வரையிலான கடந்த மூன்று வருடங்களில், (அ) (ii) வகையில் அடங்கும் நுகர்வோர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணத்தினையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட கட்டணமாற்றங்களை ஒரு நூற்றுவீதமாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011 சனவரியிலிருந்து இற்றைவரை இ.மி.சபைக்கு ஏற்பட்ட மாதாந்த நட்டத்தினையும்;

(ii) இ.மி.சபைக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நுகர்வோர் வகையும் கொண்டிருந்த பங்களிப்பினை நூற்றுவீதமாகவும் உண்மையான பெறுமதியிலும் வெவ்வேறாகவும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1350/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலந்தோட்டை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின் வலவ்வேவத்த வீதியில் ஓலுவிலவில் அரிசி மா சார்ந்த தொழிற்சாலையொன்றை அமைக்கும் பொருட்டு அடிக்கல் நாட்டப்பட்டுள்ள போதிலும் மேற்படி கருத்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இக்கருத்திட்டம் நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இத்தொழிற்சாலையை துரிதமாக ஆரம்பித்து பிரதேச மக்கள் மத்தியில் அரிசி மாவை பிரபல்யமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், இக்கட்டடத்தையும் காணியையும் வேறு அலுவலுக்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1864/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் இலங்கையில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றிய உள்நாட்டு—வெளிநாட்டு விளையாட்டு வீரர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கிய தங்குமிடங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தங்குமிடங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு தங்குமிடத்திலும் தங்கிய அணிகள் யாவை என்பதையும்;

(iv) அத்தகைய ஒவ்வோர் இடங்களிலும் விளையாட்டு வீரர்களுக்காக ஒதுக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கைகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) அத்தகைய ஒவ்வோர் இடத்திற்காகவும் செலவிட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(vi) தற்போது மேற்படி தங்குமிடங்களுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(vi) இன்படி அனைத்துக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படாவிடின் பணம் செலுத்தப்பட வேண்டிய தங்குமிடங்கள் மற்றும் செலுத்த வேண்டிய தொகை ஒவ்வோர் இடத்திற்கிணங்க எவ்வளவு என்பதையும்;

(ii) பணம் செலுத்துதல் உரிய வகையில் நிகழாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1187/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 5 ஆண்டுகளுக்கான,

(i) வெள்ளைப் பூண்டின் மொத்த நுகர்வையும் தலா ஒரு நபருக்கான வீத நுகர்வையும்;

(ii) வெள்ளைப் பூண்டின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் கிலோ ஒன்றுக்கான உற்பத்திச் செலவு ஆகியவற்றையும்;

(iii) அதன் இறக்குமதி அளவையும்;

(iv) இறக்குமதிசெய்யப்படும் வெள்ளைப் பூண்டின் பெறுமதியையும்

வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2080/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலேவெல நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கொழும்பு – திருகோணமலை வீதி விஸ்த்தரிப்புப் பணிகளுக்காக நகர எல்லைக்குள் காணிகள் சுவீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிகள், சொத்துக்களுக்காக நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) நட்டஈட்டை பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

(iv) நட்டஈட்டை வழங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றளவில் செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிகள், சொத்துக்களுக்காக இன்றுவரை நட்டஈடு கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் இவர்களது எண்ணிக்கை மற்றும் செலுத்த வேண்டியுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களுக்கு நட்டஈடு செலுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்கும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 யூலை 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0686/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2010 செப்டம்பர் 01ஆம் திகதியன்றுள்ளவாறு, இலங்கை அரசாங்கத்தின் தங்க ஒதுக்கத்தில் மத்திய வங்கியினால் ஏலமிடப்பட்ட தொகை யாதென்பதையும்,

(ii) மேற்படி ஏலத்தில் விடப்பட்ட தங்கத்தின் பெறுமதியை ஐ.அ.டொலர்களிலும் இலங்கை நாணயத்திலும் யாதென்பதையும்,

(iii) அரசாங்கத்தினால் தங்கம் என்ன விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்,

(iv) பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் ஏதேனும் இலங்கை மத்திய வங்கி ஒதுக்கத்தில் சேர்க்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தங்கம் ஏதாவது விற்பனை செய்யப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், தங்கத்தின் விற்பனை விலை எவ்வளவு என்பதையும்,

(iii) இத்தங்க விற்பனை விலைமனுக்கோரல் மூலமா அல்லது ஏலவிற்பனை மூலமா மேற்கொள்ளப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1352/ '11

கௌரவ புத்திக பதிரண,— மின்வலு,சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி குறுவிட்ட மஹவத்தகந்த தொடக்கம் தெனீபிட்ட தேயிலை குடியிருப்பு வரை மின்சாரம் வழங்குவதற்காக மின்மாற்றி (Transformer) ஒன்று பொருத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ள போதிலும் தெனீபிட்ட தேயிலை குடியிருப்புப் பிரதேச மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இப்பிரதேச மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மின்சாரம் வழங்கப்படுமெனில் அத்திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1865/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக்கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் கொரியா அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்குவதற்கு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ள தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை யாது;

(ii) இது தொடர்பாக கொரியாவிலிருந்து இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) முதலாம் கட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) வரவழைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை விண்ணப்பதாரர்களுக்கு வழங்குவதற்கு போதியதாக இருந்தனவா;

(v) இன்றேல், மீண்டும் கொரியாவிலிருந்து விண்ணப்பங்கள் இந்நாட்டுக்கு வரவழைக்கப்பட்டதா;

(vi) மேலதிக விண்ணப்பங்கள் இந்நாட்டில் அச்சிடப்பட்டிருப்பின் அவற்றை அச்சிட்ட நிறுவனம் யாது;

(vii) இந்நிறுவனம் அரச நிறுவனமாக இல்லாவிடின் அதன் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கொரியாவின் தொழில் வாய்ப்புக்களுக்கு ஆட்சேர்க்கும் நடைமுறை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2023/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் மூலமாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் யாவை;

(ii) மேற்படி புலமைப்பிரிசில்கள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2106/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை தோட்டத் துறையில் தற்போது செயற்படுகின்ற,

(i) அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, கற்பிக்கப்படும் மொழி மூலத்தின் படி மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்வதையும்;

(ii) தேசிய பாடசாலைகள், மாகாண சபைப் பாடசாலைகள், நவோத்யா பாடசாலைகள் மற்றும் இசுறு பாடசாலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் எண்ணிக்கையையும்;

(iv) இரண்டாம் நிலை 1000 பாடசாலைகள் கருத்திட்டத்திற்குரிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடந்த 5 வருட காலத்தில் தோட்டத்துறை மாணவர்களின் 5 ஆம் ஆண்டு, சாதாரண தர மற்றும் உயர் தர பெறுபேறுகள் மாவட்ட மற்றும் வலய மட்டத்தில் யாவை என்பதையும்;

(ii) தோட்டத்துறை மாணவர்கள் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமைய உருவாக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2295/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது கல்வி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மனித மற்றும் பௌதீக வளக் கருத்திட்டங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும்

(i) பிரதானமான நோக்கம்;

(ii) ஆரம்பித்த ஆண்டு மற்றும் நிறைவு செய்ய உத்தேசித்துள்ள ஆண்டு;

(iii) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை;

(iv) வெளி நாட்டு உதவி கிடைக்குமாயின், வழங்கும் நிறுவனம் மற்றும் வழங்கப்படும் தொகை ஆகியவை வெவ்வேறாகவும்; அத்துடன்

(v) அரசு ஒதுக்கியுள்ள பணத்தொகை

யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1063/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) சீனா, அமெரிக்கா, இந்தியா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளினாலும் நிறுவனங்களினாலும் கடந்த 15 வருடங்களாக வழங்கப்பட்ட கடன்கள் அல்லது மானியங்களின் காலப்பகுதியின் முடிவின் போது செலுத்தப்படவுள்ள மொத்தத் தொகையினை அமெரிக்க டொலர்களிலும்;

(ii) இக்கடன்களின் சராசரி மீளச் செலுத்தல் கால அளவினை நாடுகள் அல்லது நிறுவனங்கள்வாரியாக வெவ்வேறாகவும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1353/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தின் பிபிலை கல்வி வலயத்திற்குரிய, மெதகம கோட்டக்கல்வி அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரை இற்றுப்போய் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளதென்பதையும்;

(ii) இந்த நிலைமையானது அலுவலக ஊழியர்களின் உயிருக்கு ஆபத்தாகும் என்பதைப் போன்றே நிருவாக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதற்கும் காரணமாக அமைந்துள்ளதென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த அலுவலகக் கட்டிடத்தை உடனடியாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) இதற்காக தற்போது நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2081/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கடந்த காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட தரங்குறைந்த பெற்றோல் தொகையிலிருந்து எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள பெற்றோலின் அளவு யாது;

(ii) மேற்படி தொகையில் இருந்து விடுவிக்கப்படாத அளவு யாது;

(iii) விடுவிக்கப்படாத மேற்படி எரிபொருளின் பெறுமதி யாது;

(iv) தரங்குறைந்த எரிபொருள் என உறுதிசெய்யப்பட்ட பின்னர் எஞ்சிய எரிபொருள் தொகையிலிருந்து எரிபொருள் விடுவிக்கப்பட்டுள்ளதா;

(v) எஞ்சிய எரிபொருள் தொகை சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற அல்லது ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2288/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமாகம பிட்டிபன மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தை நிர்மாணிப்பதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளை சுவீகரித்த அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(iii) மேற்படி காணியில் மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னர் குடியிருப்பாளர்கள் இருந்தனரா என்பதையும்;

(iv) 1/7 பீ, பிட்டிபன வடக்கு ,ஹோமாகம முகவரியில் 35 வருடங்களாக குடியிருக்கின்ற திரு.எம்.ஏ. அநுரவின் காணியும் மேற்படி நடவடிக்கைக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்பட்ட போது குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுவீகரிக்கப்பட்டுள்ள மேற்படி காணியில் குடியிருப்பவர்களது மின்சாரம் தற்போது துண்டிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இவர்கள் பயன்படுத்திய கிணறு மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் எழுந்துள்ள மேற்படி நிலைமைகளின் காரணமாக அங்கு குடியிருந்த ஆட்களின் வாழ்வதற்கான அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

2296/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 'இசுறு பாடசாலை', மற்றும் 'நவோத்யா பாடசாலை' கருத்திட்டங்கள்,

(i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவை என்பதைம்;

(ii) ஆரம்பிக்கப்பட்டதன் குறிக்கோள்கள் யாவை என்பதையும்; அத்துடன்

(iii) தற்போதுகூட மேற்படி கருத்திட்டங்கள் வெவ்வேறாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 'இசுறு பாடசாலை', மற்றும் 'நவோத்யா பாடசாலை' கருத்திட்டங்களுக்காக,

(i) ஈடுபடுத்தப்பட்டுள்ள உள் நாட்டுப் பணத் தொகை;

(ii) ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளி நாட்டுப் பணத் தொகை; அத்துடன்

(iii) வெளி நாட்டுப் பணம் வழங்கிய நிறுவனங்கள், வழங்கியுள்ள தொகை மற்றும் ஆண்டுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி கருத்திட்டங்களின் கீழ்,

(i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் இற்றை வரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் யாதென்பதையும்;

(ii) அடுத்து வரும் பத்தாண்டு காலத்தில் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இசுறு மற்றும் நவோத்யா பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்; அத்துடன்

(iii) ஆயிரம் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் கருத்திட்டத்தில் உள்வாங்கப்படும் இசுறு மற்றும் நவோத்யா பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1200/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்பிற்காக இலங்கையர்கள் சென்ற நாடுகள் எவை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட வருடங்களில் அத்தகைய நாடுகளுக்கு வேலைவாய்ப்பிற்காக சென்ற ஆண்களதும் பெண்களதும் எண்ணிக்கை என்னவென்பதை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாகவும்;

(iii) அவர்களினால் ஈட்டப்பட்ட சராசரி சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iv) அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த சம்பள நிர்ணயம் உள்ளதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1359/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின் கட்டான பிரதேச சபைக்குரிய வேத்தேவ சேதனப் பசளை உற்பத்திக்கூடம் மக்கள் செறிவுமிக்க வீதியொன்றின் அருகில் அமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக பகுதிவாழ் மக்களின் சுகாதாரத்திற்கு தீவிர அச்சுறுத்தல் தோன்றியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர் நிலைமையைக் கருத்திற் கொண்டு மேற்படி சேதனப் பசளை உற்பத்திக்கூடத்தை மக்கள் இல்லாத பிரதேசமொன்றில் நிறுவ நடவடிக்கை எடுப்பாரா;

(ii) இதற்காக ஏற்கனவே திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில் அதனை மீள்நிறுவ உத்தேசித்துள்ள இடம் யாது;

(iv) அவ்விடத்தில் பசளை உற்பத்திக் கூடத்தை நிறுவ எடுக்கும் காலம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2082/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் பெரிய வெங்காயப் பயிர்ச் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விதைகள் முளைக்காதிருந்ததன் அடிப்படையில் பயிர்ச்செய்கை வெற்றியளிக்காததன் காரணத்தினால் இவர்களுக்கு நேரிட்ட நட்டம் கணிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதற்கிணங்க பெரிய வெங்காயச் செய்கையினால் ஒரு ஏக்கருக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(iii) விதைகள் முளைக்காமையினால் எத்தனை ஏக்கர் பெரிய வெங்காயச் செய்கைக் காணிகளுக்கு சேதமேற்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மேற்கண்டவாறு பயிர்ச்செய்கை சேதங்களுக்கு முகம்கொடுத்த விவசாயிகளுக்கு நட்டஈடு செலுத்தி முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், ஒரு ஏக்கருக்காக செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) நட்டஈடு செலுத்தப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முளைக்காத பெரிய வெங்காய விதைகளை இறக்குமதி செய்த நிறுவனத்தின் அல்லது நிறுவனங்களின் விபரங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களுக்கு தரத்தில் குறைவான விதைகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியவர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2297/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன அமைச்சரும், மத அலுவல்கள் அமைச்சருமானரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்குகையில் கவனத்தில் எடுக்கப்படும் பெற்றோர்களின் வருடாந்த வருமான எல்லை யாதென்பதையும்;

(ii) மகாபொல புலமைப்பரிசில் தொடர்பான மேற்படி வருமான எல்லை இறுதியாக திருத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மகாபொல புலமைப்பரிசில் தொடர்பான மேற்படி திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் காணப்பட்ட மேற்படி வருமான எல்லை யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2012 யூலை 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0691/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) மத்திய வங்கி தாபிக்கப்பட்டதிலிருந்து இற்றைவரையில் இலங்கையில் வர்த்தக வங்கிகளை நிறுவுவதற்கு விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கையையும்,

(ii) ஒவ்வொரு பிரதான வங்கியின் கீழும் இயங்கும் கிளைகளின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்,

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வங்கிகளின் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தையும்,

(iv) இன்றுள்ளவாறாக வர்த்தக வங்கிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிடப்பட்ட வங்கிகளுள், இலங்கையில் தலைமையகத்தைக் கொண்டுள்ள எவையேனும் வெளிநாட்டு வங்கியொன்றினை வாங்குவதற்கு பணத்தினை வைப்புச் செய்துள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவ் வங்கியின் பெயரையும் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பணத்தின் பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வர்த்தக வங்கியல்லாத வங்கிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) இலங்கையில் தற்போது இயங்கும் வர்த்தக வங்கியல்லாத வங்கிகளின் எண்ணிக்கையினையும்,

(iii) அவ்வங்கிகளின் பங்கு மூலதனத்தினையும்,

(iv) வர்த்தக வங்கி அல்லது வர்த்தக வங்கி அல்லாத வங்கி ஏதாவது வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அவ்வங்கிகளின் பெயர்களையும் அவற்றின் பணிப்பாளர்களின் பெயர்களையும்

அவர் அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1364/ '11

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய மடல – தம்முல்ல – கரதின பிரதான வீதி சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கை உரிய தரத்திற்கமைவாக இடம்பெறவில்லையென மக்கள் குற்றம் சுமத்துகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் மூன்று கிலோமீற்றர் தூரத்தை அபிவிருத்தி செய்வதற்கு செலவாகியுள்ள மொத்த பணத்தொகை யாதென்பதையும்;

(ii) ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் ஏற்புடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்;

(iv) கேள்விப்பத்திரம் அளிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப்பத்திர விலை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1868/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத் தொடர்புகள், தகவல்தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) ரெலிகொம் நிறுவனத்தின் நாடுபூராவிலும் உள்ள பிராந்திய அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்திலும் பணியாற்றுகின்ற நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மாதாந்தம் பெறுகின்ற சம்பளம், படிகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் தனித்தனியாக யாவை;

(ii) மேற்படி நிறுவனத்தின் ஏனைய நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மாதாந்தம் பெறுகின்ற சம்பளம், படிகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் தனித்தனியாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2298/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் கல்வி முறைமையில் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களும் அவ்வாறான ஒவ்வொரு சீர்திருத்தமும் கொண்டுவரப்படுவதற்கு ஏதுவாயிருந்த நோக்கங்களும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சீர்திருத்தத்தின் கீழும் பாடசாலை பாடவிதானங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2628/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— துறைமுக, நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைக்கு 05 ஆண்டுகளுக்கு முன்னர் விஸ்தரிக்கப்பட்டு புனரமைக்கப்பட்ட அம்பாறை பிரதான வீதியில் மின் கம்பங்கள் அகற்றப்பட்டு பொருத்தமான இடங்களில் நிறுவப்படாமையினால் அவ்வீதியில்,

(i) வாகனப் போக்குவரத்துக்கு சிரமங்கள் ஏற்பட்டுள்ளதையும்;

(ii) பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

(iii) வாகன விபத்துகள் அதிகரித்துள்ளதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அம்பாறை பிரதான வீதியிலுள்ள மேற்படி நிலைமையை நிவர்த்தி செய்து அவ்வீதியை பயன்படுத்துவோர்களுக்கு வசதிகள் செய்துகொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0993/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) எரிவாயுக் கம்பனியானது எப்போது செல் கம்பனி லிமிடட்டிற்கு விற்கப்பட்டது என்பதையும்;

(ii) விற்கப்பட்ட பங்குகளின் விலையையும் வீதத்தையும்;

(iii) எரிவாயுக் கம்பனியை விற்றபோது ஆட்சியிலிருந்த சனாதிபதியின் பெயரையும் அரசாங்கத்தையும்;

(iv) விற்ற திகதியிலிருந்து மீளக் கொள்வனவு செய்த திகதி வரையில் அரசாங்கத்திற்குக் கிடைத்த இலாபத்தினையும்;

(v) செல் டேர்மினலிலே அரசாங்கம் கொண்டுள்ள பங்கினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) செல் கம்பனி லிமிடட்டின் பங்குகளை மீளவாங்குவதற்கு அரசாங்கம் செலுத்திய விலையினையும்;

(ii) அரசாங்கம் மீளவாங்கிய பங்குகளின் வீதத்தையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட இந்த மீள் கொள்வனவு எப்போது மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(iv) விலைப் பெறுமதி குறித்து எவ்வாறு இணக்கம் காணப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1370/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வெலிகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் வெலிகம, கப்பரதொட்ட, "தர்ஷன" வில் வதியும் திரு. எஸ்.ரீ.கே. ஜயவீர உள்ளிட்ட சகோதரர்களுக்கு சொந்தமான வெலிகம, கப்பரதொட்ட புதிய காலி வீதியில் 153/1 இலக்கமுடைய தனிகஹவத்த எனும் காணியில் சுமார் 18.235 பர்சஸ் காணித் துண்டொன்று வெலிகம நகர சபையினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிப்பு இடம்பெற்று அண்ணளவாக ஒரு வருடகாலம் கடந்திருந்தாலும் இற்றைவரை நட்டஈடு வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலமாக சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிக்கு மேலதிகமாக திரு. எஸ்.ரீ.கே. ஜயவீர உள்ளிட்ட சகோதரர்களுக்கு சொந்தமான அண்மித்துள்ள காணிகளையும் உள்ளடக்குகின்ற வகையில் வெலிகம நகர சபையினால் தற்போது கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சுவீகரிக்கப்பட்ட காணிக்கு இற்றவைரை நட்டஈடு வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) நட்டஈடு செலுத்தப்படுமாயின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்;

(iii) நட்டஈடாக எவ்வளவு பணம் செலுத்தப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்களை அமைப்பதற்காகப் பயன்படுத்திய காணிக்கும் நட்டஈடு பெற்றுகொடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், இந் நட்ட ஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2083/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமநல சேவைகள், வன சீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யோதவாவி சரணாலய பிரதேசத்தின் கீழுள்ள பாதுகாக்கப்பட்ட பிரதேசத்திற்கு உரித்தான ஒரு பகுதி துப்புரவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந் நிலத்தின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தை துப்புரவு செய்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) அவ்வாறு செய்தமைக்கான காரணம் யாது என்பதையும்;

(v) அதற்கென வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் சுற்றாடல் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், மேற்படி அனுமதிப் பத்திரத்தை இந்த உயரிய சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) இந் நிலப்பகுதி யோதவாவியின் நீரேந்து பிரதேசத்திற்கு உரியதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2299/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை பெருந்தோட்ட கல்வித் துறையின் அபிவிருத்திக்காக, மத்திய அரசின் கல்வி அமைச்சும் மாகாண சபை கல்வி அமைச்சுக்களும் நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத்திட்டங்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு வேலைத்திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பெருந்தோட்டக் கல்வித் துறையின் அபிவிருத்திக்காக அண்மைக் காலத்தில் செயற்பட்டுள்ள பல்வேறுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினாலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் அவற்றுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நிதிசார்ந்த பெறுமதிகள் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல்,ஏன்?

2629/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெல்லாவெளி பிரிவுக்குடப்பட்ட போரதீவுப்பற்று, காந்திபுரம் கிராமத்தில் வசிக்கும் 214 குடும்பங்களைச் சேர்ந்த 800 இற்கும் மேற்பட்டோர் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பதையும்;

(ii) அப்பிரதேசத்தில் காணப்படும் கிணற்று நீர் உவர் தன்மையை கொண்டுள்ளதென்பதையும்;

(iii) குடிநீர் வசதிகளை பெற்றுத் தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பிரதேசத்தில் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1306/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 10 வருடங்களாக நாட்டுக்கு கிடைத்த அனுப்பு தொகைகளை அமெரிக்க டொலர்களிலும் இலங்கை ரூபாவிலும் வெவ்வேறாகவும்,

(ii) அந்த அனுப்பு தொகைகள் எந்த நாடுகளிலிருந்து பெறப்பட்டனவோ அவற்றின் பெயர்களையும்;

(iii) மேற்குறிப்பிட்ட நாடுகளில் இருந்து கடந்த 5 வருடங்களாக ஒவ்வொரு நபரிடமிருந்தும் பெறப்பட்ட சராசரி வைப்பினை வருட அடிப்படையிலும் நாட்டின் அடிப்படையிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வெளிநாட்டு ஒதுக்கங்களைப் பாதுகாப்பதற்கு உதவுகின்ற பிரசைகளுக்கு வழங்கப்படுகின்ற நன்மைகளையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1396/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில், வெல்லதொட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள தங்கஹ எல பாலம் புனரமைக்கப்படாததன் காரணமாக கடும் ஆபத்தான நிலைமை தோன்றியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாலத்தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் இப்பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) தற்போது இதற்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2114/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நிர்மாணக் கைத்தொழில் பேரவை மற்றும் நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் சங்கம் என்பவை ஒருங்கிணைந்த கூட்டுத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் படி நிறுவப்பட்ட வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரணக் கம்பனி பதிவுசெய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அக்கம்பனியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நிர்மாணக் கைத்தொழில் பேரவை மற்றும் நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் சங்கம் என்பவை கொண்டுள்ள பங்குகளின் அளவு தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) அக்கம்பனி பதிவுசெய்யப்பட்ட காலப்பகுதியில் மேற்படி நிறுவனங்களுக்கு மேலதிகமாக வேறு ஆட்களுக்கோ நிறுவனங்களுக்கோ பங்குகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு வழங்கப்பட்டிருப்பின் அவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் ஒவ்வொரு ஆள் அல்லது நிறுவனத்திற்குச் சொந்தமான பங்குகளின் அளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(v) மகநெகும வீதி நிர்மாண உபகரணக் கம்பனியின் நிகழ்கால பங்குரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vi) அக்கம்பனி நிறுவப்பட்ட ஆண்டிலிருந்து இற்றைவரை பங்குகளைக் கொள்வனவு செய்த மற்றும் கொள்வனவு செய்த பங்குகளிலிருந்து நீங்கிய ஒவ்வொரு பங்குரிமையாளரினதும் பெயர், முகவரி மற்றும் பங்குகளின் அளவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2306/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஐந்து வயது அல்லது அதனைவிடக் குறைந்த வயதுடைய பிள்ளைகளுடன் சிறையிலிடப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை, குற்றத்தின் இயல்பு மற்றும் சிறையிலிடப்பட்ட காலஎல்லை என்பவற்றின் அடிப்படையில் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டளவில் மேற்படி தாய்மார்களுடன் இருந்த பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களது வயதின் அடிப்படையில் தனித்தனியாக எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிறைச்சாலையினுள் தாயுடன் இருக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆண்டு வரை ஒவ்வொரு வருடத்திலும் மேற்படி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரசாங்க அல்லது பல்வேறுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்களது நிதியுதவியின் கீழ் சிறைச்சாலையிலுள்ள பிள்ளைகளுக்காகவும் பெண்களுக்காகவும் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள நலனபுரி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டில் மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சிறைச்சாலையில் உள்ள பெண்களினதும் பிள்ளைகளினதும் அபிவிருத்திக்காக ஈடுபடுத்தியுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2630/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திகாமடுல்ல மாவட்டத்தில் வெல்லாவெளி பிரதேசத்தின் காந்திபுரம் கிராமத்தில் அமைந்துள்ள கலைமகள் கல்லூரியில்,

(i) தரம் 1 முதல் தரம் 5 வரையில் மாத்திரமே வகுப்புகள் நடைபெறுகின்றன என்பதையும்;

(ii) காணப்படுகின்ற பௌதீக வளங்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து வைக்குமாறு மேற்படி கிராம மக்கள் கோருகிறார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) காந்திபுரம் கலைமகள் கல்லூரிக்கு பௌதீக வளங்களை வழங்குவதற்கும்;

(ii) மேற்படி பாடசாலையை சாதாரணதர வகுப்புகள் நடைபெறும் படசாலையின் மட்டத்துக்கு தரமுயர்த்துவதற்கும்;

துரித நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 யூலை 20 வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0851/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் உள்நாட்டு அரிசி நுகர்வையும்;

(ii) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்கான உத்தேசிக்கப்பட்ட நுகர்வையும்;

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 பெப்ரவரி மாதத்தில் 100,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்த அரசாங்க நிறுவனங்களின் பெயர்களையும்;

(ii) அவ் இறக்குமதிக்கான நிதி மூலத்தையும்;

(iii) மேற்கண்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் இறக்குமதி விலை விற்பனை விலை, விற்பனை செய்யப்பட்ட அளவு கையிருப்பில் உள்ள அளவு ஆகியவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் விலை கிலோ ஒன்றிற்கு இலங்கை ரூபா 65/- இற்கு மேற்பட்டதாக இருக்கையில் மேற்கண்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட அண்ணளவாக 30,000 மெற்றிக் தொன் அரிசி தனியார் துறையினருக்கு கிலோ ஒன்றிற்கு இலங்கை ரூபா 31 எனும் விலையில் 2010, செத்தெம்பர் மாதத்தில் விற்கப்பட்டதையும்;

(ii) தனியார் வர்த்தகர்கள் அவ் அரிசியை உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனை செய்யக்கூடாது என அரசாங்கம் வலியுறுத்தியிருந்த போதும் அவர்கள் அதை விற்பனை செய்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) மேற்கூறியவாறு அரிசியை விற்பனை செய்த தனியார் வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1567/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாறை மாவட்டத்துக்குரிய மஹஓய பிரதேச செயலாளர் பிரிவில் மஹஓயவிலிருந்து பொல்லேபெத்த வரையிலான வீதியை இணைத்து அமைக்கப்பட்டுள்ள இரும்பினாலான பாலம் சிதைவடைந்துள்ளதால் மக்கள் கடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் புனரமைப்புப் பணிகளை துரிதமாக ஆரம்பிப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1869/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத் தொடர்புகள், தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் வாடிக்கையாளர் தொலைபேசி இணைப்புகளிலிருந்து பெறுகின்ற வருமானம் வருடந்தோறும் தனித்தனியாக எவ்வளவு;

(ii) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு கம்பியில்லா நிரந்தர தொலைபேசிகளை (CDMA) வழங்குவதற்கு ஆரம்பித்த திகதி யாது;

(iii) தற்போது ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள CDMA தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்ற வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி நிறுவனம் CDMA தொலைபேசிகளை வழங்க ஆரம்பித்த திகதியில் இருந்து இற்றைவரை அதன்மூலமாக பெற்றுள்ள வருமானம் வருடந்தோறும் தனித்தனியாக எவ்வளவு;

(v) ரெலிகொம் நிறுவனம் ஆரம்பத்தில் CDMA தொலைபேசி இணைப்பினை வழங்கிய விலை மற்றும் மேற்படி தொலைபேசி இணைப்பினை வழங்கும் தற்போதைய விலை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1911/ ’11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2001 இல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய சுயமாக முன்வராதோர் மீளக்குடியமர்த்தல் கொள்கையின் (NIRP) கோட்பாடுகளின் பிரகாரம்;

(i) தவிர்க்க முடியாத காரணங்களின் நிமித்தம் மாத்திரமே சுயமாக முன்வராதோர் தொடர்பான மீள்குடியேற்றங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாக கலந்தாலோசித்ததன் பின்னரே மீள்குடியேற்றத்திற்கான இடம், வாழ்வாதாரம், நட்டஈடுகள், அபிவிருத்தி தொடர்பான விருப்பங்கள் ஆகியவற்றைத் தெரிவுசெய்தல் ஆகியவை நிர்ணயிக்கப்படுகின்றன என்பதையும்;

(iii) இந்த காணி, கட்டமைப்புகள், வாழ்வாதாரங்கள் போன்றவற்றைக் கவனத்திற் கொண்டு மாற்றீட்டுக் காணிகளை வழங்குதல் அல்லது நட்ட ஈடாக பணத்தை வழங்குதல், மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்

(iv) மாற்றீட்டுப் பெறுமதிகள் முழு காணிக்குமான நட்டஈடாக உடனடியாக வழங்கப்பட்டன என்பதையும்;

(v) காணிக்கான ஆவணப்படுத்தப்பட்ட உரித்தைக் கொண்டிராத மக்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட்டனர் என்பதையும்;

(vi) பாதிக்கப்பட்ட மக்கள் தம்மை மீள்கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கப்பட்டதுடன் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் வசதிகள் செய்யப்பட்டன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 சனவரி முதல் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தினுள் தேசிய சுயமாக முன்வராதோர் மீளக் குடியமர்த்தல் கொள்கைக்கு (NIRP) உடன்பட்ட சந்தர்ப்பங்களை நடைமுறைப்படுத்திய முகவராண்மைகளுடனும்;

(ii) ‘தேசிய சுயமாக முன்வராதோர் மீளக்குடியமர்த்தல் கொள்கை’ சகல மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதான நகரங்கள் ஆகியவற்றில் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2304/ ’12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த பத்து வருட காலப்பகுதிக்குள் கல்வி அமைச்சிலிருந்து லீவு பெற்றுக் கொண்டும் மற்றும் நிரந்தரமாக தொழிலில் இருந்து விலகியும் ஆசிரியர்களாக சேவையாற்றும் பொருட்டு வெளிநாடு சென்றுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) கடந்த பத்து வருட காலப்பகுதிக்குள் இந்நாட்டின் கல்வி அமைச்சின் நியமனங்களைப் பெற்று ஆசிரியர்களாக சேவையாற்றுகின்ற வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை இவர்களின் நாடுகளுக்கு ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2631/ ’12

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசான, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் முன்னிலையில், பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தத்தை மேலும் பலப்படுத்துவதாகவும் பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் தடைகளை நீக்குவதாகவும் அரசாங்கத்தினால் வாக்குறுதி அளிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மீண்டும் 2007 சர்வதேச பருவகால மீளாய்வுக் (UPR) கூட்டத்திலும் பதினேழாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது என்பதையும்;

(iii) பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தம் இரத்துச் செய்யப்பட்டதன் மூலம் மேற்படி வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி வாக்குறுதிகள் மீறப்பட்டமையினால் அரசாங்கத்தின் நம்பகத்தன்மை சர்வதேச ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(v) இதனால் எமது நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழுவின் விதப்புரைகள் மற்றும் இலங்கை பற்றிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரேரணைகள் மூலம் சுயாதீன ஆணைக் குழுக்களின் தேவைப்பாடு விதந்துரைக்கப்பட்டுள்ளதால், பதினேழாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி சுயாதீன ஆணைக்குழுக்களை தாபிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2632/ ’12

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் சுகாதார திணைக்களத்திற்கு குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனரா என்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டின் மே மாதமளவில் நாட்டில் சேவையாற்றிய குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் யாவை என்தையும்

அவர் குறிப்பிடுவார?

(இ) இன்றேல், ஏன்?

1199/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 5 வருடங்களில்,

(i) தேங்காயின் மொத்த நுகர்வு, தலைக்குரிய நுகர்வு எவ்வளவு என்பதையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்களின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iv) தேங்காய் இறக்குமதியாளர்களுக்கு உண்மையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மானியம் எவ்வளவு என்பதை உறுதிப்படுத்துவதற்கேற்ற தகுந்த ஆதாரங்களுடனும்

வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட நேரடி, மறைமுக வரிகள் எவ்வளவு என்பதை தனித்தனியாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1571/ '11

கௌரவ புத்திக பதிரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய எத்கந்துர கா/சீவலி மகா வித்தியாலயத்தின் நான்கு வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடத்தின் கூரையும் சுவர்களும் மிகவும் சேதமடைந்த நிலைக்குள்ளாகியுள்ளதால் இவ்வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் மிகவும் பாதுகாப்பற்ற நிலையின் கீழ் கல்வி கற்க நேரிட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தின் திருத்த வேலைகளை துரிதமாக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படுமாயின் அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2115/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி நிர்மாண மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்குச் சொந்தமாகவிருந்து வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரணக் கம்பனிக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள், காணிகள், கட்டடங்கள் அல்லது வேறு வளங்கள் யாவை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள கட்டடங்களின் பரப்பளவு யாவை என்பதையும்;

(iv) உபகரணங்கள் மற்றும் பொறிகளை வழங்குகையில் அத்தினத்தன்று மதிப்பீடு செய்யப்பட்ட விலைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மகநெகும கம்பனிக்கு வழங்கப்பட்ட பொறிகள் மற்றும் உபகரணங்களின் முழுப் பெறுமதி யாவையென்பதையும்;

(ii) அப்பெறுமதிக்கான ஒப்பந்தமொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ் உடன்படிக்கையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) அவ்வுடன்படிக்கைக்கிணங்க பெற்றுக்கொண்ட பெறுமதிக்காக அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவினை செலுத்தித் தீர்ப்பதற்கு உரிய காலவரையறை யாதென்பதையும்;

(v) மேற்படி கொடுப்பனவுகளில் தற்போது செலுத்தியுள்ள பணத்தொகை மற்றும் செலுத்த வேண்டிய பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2310/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை ஒவ்வோராண்டிலும் தரம் ஐந்து மற்றும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின்போது பாடசாலைகளிலிருந்து விலகிய மாணவர்களின் எண்ணிக்கை,

(i) ஆண்/பெண் பால் அடிப்படையில்;

(ii) சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலத்தின் அடிப்படையில்; மற்றும்

(iii) கிராமிய, நகர மற்றும் தோட்டத் துறைகளின் அடிப்படையில்

வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை ஒவ்வோரண்டிலும் பாடசாலையில் சேர்க்கப்படாத ஐந்து வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளின் சதவீதம் வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) 2000, 2005 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் பிள்ளைகள்,

(i) ஆரம்பக் கல்வியில் சேருதல்,

(ii) தரம் ஐந்து வரை தங்கியிருத்தல், மற்றும்

(iii) சாதாரண தரப் பரீட்சை வரை தங்கியிருத்தல்

ஆகியவற்றின் விகிதங்கள் ஆண்/பெண் பால் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) 2010ஆம் ஆண்டில் கிராமிய, நகர மற்றும் தோட்டத்துறையின் கீழ் பாடசாலை மாணவர்களின் கனணி அறிவு யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1307/ '11

கௌரவ.ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில்,

(i) நிதி, திட்டமிடல் அமைச்சிற்கு உரித்தல்லாத கட்டிடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பதனால் ஏற்படும் மொத்த செலவினத்தையும்;

(ii) வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களின் சதுர அடிக்கான வாடகைப் பெறுமதியையும்;

(iii) கட்டிடங்களுக்கான குத்தகைக்கால அளவையும்;

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஆண்டுகளில்,

(i) அமைச்சின் எந்தவொரு நிறுவனத்திற்கும் உரித்தல்லாத வாகனங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு அமர்த்தியதில் ஏற்பட்ட மொத்த செலவினத்தையும்;

(ii) சொந்தமாக உள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(iii) வெளிவளங்களிலிருந்து பெற்றுக்கொண்ட ஏனைய சேவைகளையும்;

(iv) மேற்படி வெளிவளங்களிலிருது பெற்ற சேவைகளுக்கான செலவினத்தையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும்;

(vi) மொத்தப் பணியாளர் தொகையையும்;

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1576/ '11

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேசத்தில் அமைந்துள்ள இஹல பெலிகல்ல கிராமிய ஆஸ்பத்திரியின் வெளி நோயாளர்கள் சிகிச்சை பெறும் கட்டிடம் பெருமளவு சிதைவடைந்துள்ளதென்பதையும்;

(ii) இந்த நிலைமையானது சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற நோயார்களினதும் பணியாட்டொகுதியினரதும் உயிருக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கட்டிடத்தை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருப்பின், மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2116/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குள் வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரணக் கம்பனியின் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக கிடைக்க வேண்டிய வாடகைக் கட்டணங்கள் ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வாடகைக் கட்டணங்களிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் அறவிடப்பட்டுள்ள அளவு மற்றும் அறவிடப்பட்டிராத அளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள கட்டடங்களின் பரப்பளவு யாவை என்பதையும்;

(iv) அக்கட்டணங்களை அறவிட்டுக் கொள்ளாமைக்கான காரணங்கள் யாவயென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2311/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பல்கலைக்கழக அனுமதியுடன் தொடர்புடைய கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைப் பெறுபேறு மதிப்பீட்டிற்கான "இஸட் புள்ளியை" பயன்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) பல்கலைக்கழக அனுமதிக்காக கவனத்தில் கொள்ளப்பட்ட மாவட்ட புள்ளி மட்டத்தை மாற்றி இஸட் புள்ளியை கவனத்திலெடுக்கத் தீர்மானிக்கப்பட்டமைக்கான பிரதானமான காரணம் யாதென்பதையும்;

(iii) இலங்கையில் நடைமுறையிலுள்ளவாறு, பல்கலைக்கழக அனுமதிக்கான பரீட்சைகளில் பெறுபேறு மதிப்பீட்டிற்கென இஸட் புள்ளி முறைமையை பயன்படுத்துகின்ற உலகத்தின் வேறு நாடுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) க.பொ.த. உ/தரப் பரீட்சையில் ஒரு பாடத்திலேனும் தோற்றாத ஒரு மாணவராக இருப்பினும், பல்கலைக்கழக அனுமதியின்போது கவனத்தில் கொள்ளப்படும் இறுதி இஸட் புள்ளி வழங்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையில் சகல பாடங்களிலும் தோற்றி, ஒரு பாடத்திலேனும் சித்தியடையாத ஒரு மாணவராக இருப்பினும், பல்கலைக்கழக அனுமதியின்போது கவனத்தில் கொள்ளப்படும் இறுதி இஸட் புள்ளி வழங்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?